**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்**

**முன்னிலை–திருமதி. P. தீபா, B.A.B.L.L.L.M.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர், மாதவரம்**

**2026–ம் ஆண்டு ஜீலை மாதம் 15–ம் நாள் புதன்கிழமை**

**CC.No.653/2020**

மாநில அரசு உதவி ஆய்வாளர் மூலமாக
எம்1 மாதவரம் காவல் நிலையம்
குற்ற எண்.588/2018 …….குற்றமுறையீட்டாளர்/வாதி

// எதிர் //

1. ரஞ்சித்குமார் (எ) ரஞ்சித், வயது.32,
த/பெ. சம்மந்தம்,
எண்.04, திருவள்ளுவர் தெரு,
மாதவரம், சென்னை–60.

2. நாகராஜ், வயது.44,
த–பெ. சம்மந்தம்,
எண்.28, திருவள்ளுவர் தெரு,
மாதவரம், சென்னை–60.

3. ஆரோக்கியராஜ், வயது.29,
த–பெ. சின்னப்பன்,
திரு.வி.க, 3வது தெரு,
மாதவரம், சென்னை–60. ............எதிரிகள்

CASE SUMMARY

| SI.No | Particulars | Details |
|---|---|---|
| I. | Period of Remand of Accused | Accused A1 – 31.10.2018 – 02.02.2019<br>Accused A2 – 22.07.2019 – 14.11.2019<br>Accused A3 – 03.12.2020 – 05.02.2021 |
| II. | Date of filling of Final Report in court | 29.12.2020 |
| III. | Date of questioning of accused under section 313(1) (a) of Cr.p.c | 06.01.2025 |
| IV | Filling of Miscellaneous petitions and their result | Nil |
| V. | Date of examination in Chief and cross examination of witnesses | PW1- 01.07.2026 |

DEEPA P

Digitally signed by DEEPA P
Date: 2026.07.15 18:42:09 +0530

| | | |
|---|---|---|
| VI. | Date of examination of accused under section 313(1)(b) of Cr.p.c | 09.07.2026 |
| VII. | Details of abscondence of accused and his appearance / production | Nil |
| VIII. | Grant of stay buy superior court and the result thereof | Nil |

இவ்வழக்கானது 29.12.2020–ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இறுதியாக 15.07.2026–ம் தேதி அன்று என் முன்பாக விசாரணைக்காக வந்ததில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.P.டெல்சி, அவர்கள் முன்னிலையாகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கில் கடந்த 11.10.2018–ம் தேதி காலை சாட்சி–1ல் லஷ்மணன் ஊரிலிருந்து புறப்பட்டு மாலை சென்னைக்கு வந்து திருப்பதி கோவிலுக்கு செல்ல வேண்டி வடபழனியிலுள்ள தனது நண்பரின் வீட்டிற்கு போய் இரவு தங்கி கொண்டு மறுநாள் திருப்பதி செல்ல வேண்டி மாதவரம் ரவுண்டான பேருந்து நிறுத்தத்தில் இறங்கி ஆந்திர பேருந்து நிலையத்திற்கு அருகே எதிரிகள் மூவரும் சாட்சி–1யிடம் கொள்ளையடித்து சுயலாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட நோக்கோடு சாட்சி–1 லஷ்மணனை சட்ட விரோதமாக வழிமடக்கி யாருடா நீ ஊருக்கு புதுசா என்று மிரட்டி சாட்சி–1 லஷ்மணன் ஆம் என்று சொல்ல அதில் எதிரி–1 ஆன ரஞ்சித்குமார் (எ) ரஞ்சித் என்பவர் நாங்க யாருன்னு தெரியுமா இந்த ஏரியாவுலேயே பெரிய ரவுடி இந்த ரஞ்சித் பேர கேட்டாலே மாதவரம் ஏரியாவே நடுங்கும் நான் ரெண்டு கொலை கேசுல ஜெயிருக்கு போயிட்டு வந்தவன் என்று கூறி தகாத வார்த்தைகளால் திட்டி பாக்கெட்டுல எவ்வளவு பணம் வச்சிருக்கன்னு 1வது எதிரி ரஞ்சித்குமார் (எ) ரஞ்சித் தன்னிடம் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்துகாட்டி, சாட்சி–1 லஷ்மணனை மிரட்டியபோது சாட்சி–1 லஷ்மணன் அதற்கு பணம் இல்லையென்று சொல்ல அருகில் இருந்த 2வது எதிரி நாகராஜ் பணம் இல்லாம இங்க எப்படிட வந்த என்று கூறிக்கொண்டு இருக்கும்போது எதிரி–1 ரஞ்சித்குமார் (எ) ரஞ்சித் என்பவனும் எதிரி–3 ஆரோக்கியராஜ் என்பவனும் சாட்சி–1 லஷ்மணன் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூபாய்.5200/– மற்றும் சாட்சி–1 லஷ்மணன் கையில் கட்டியிருந்த 2000/– ரூபாய் மதிப்புள்ள டைட்டன் வாட்ச் மற்றும் தன் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த சாம்சங் பட்டன் டைப் செல்போனையும் கொள்ளையடித்து கொண்டு எதிரிகள் மூன்று பேரும் தப்பிக்க முயற்சி செய்தபோது உடனே சாட்சி–1 லஷ்மணன் சுதாரித்துக்கொண்டு திருடன் திருடன் என சத்தம் போட்டபோது அருகிலிருந்தவர்கள் எதிரியை பிடிக்க வந்தபோது எதிரி–1 ரஞ்சித்குமார் (எ) ரஞ்சித் என்பவன் தன்னிடம் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து காட்டி யாராவது பிடிக்க வந்தீங்கன்ன இந்த கத்தியாலேயே

DEEPA P Digitally signed by DEEPA P Date: 2026.07.15 18:42:13 +0530

கொன்னுவிடுவேன் என்று மிரட்டிக் கொண்டே தள்ளு வண்டி கடையிலிருந்த பிஸ்கட் பாட்டிலை எடுத்து ரோட்டில் போட்டு உடைத்து ரூபாய். 300/– நஷ்டத்தை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு பீதியை அடைய செய்து எதிரிகள் காரணமாக இருந்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341,294(b),336,427,392,506(ii) இதச பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக எம்1 மாதவரம் காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிகளிடம் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவண நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** பின்னர் வழக்கு ஆவணங்களை பரீசிலணை செய்தும், எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341,294(b),336,427,392,506(ii) கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் பற்றி வினவ எதிரிகள் குற்றத்தை பொய் என மறுத்துரைத்தார்கள். எனவே அரசு தரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** அரசு தரப்பில் அ.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டும் ஆவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்படுகிறது.

**5. <u>அரசு தரப்பு வழக்கின் சாட்சிகளின் சாட்சியத்தின் விபரம் பின்வருமாறு</u>**

**அ)** அ.சா.1 மோகன்தாஸ், சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், தான் தற்போது எம்1 காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கினை புலன் விசாரணைச் செய்த ஆய்வாளர் திரு.செல்வகுமார் அவர்கள் பணி மாறுதலில் சென்றுவிட்டபடியால் வழக்கு கோப்புகளை கையால்வதில் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 12.10.2018 அன்று மாலை 5 மணி அளவில் நிலைய அலுவலில் ஆய்வாளர் திரு. செல்வகுமார் அவர்கள் பணியில் இருந்த போது புகார்தாரர் லட்சுமணன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப் பெற்று நிலைய குற்ற எண் 588/2018 ஆக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 397, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்து, புகார் ஆனது அ.த.சா.ஆ.1 அகவும், முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.2 ஆகவும் குறியீடுச் செய்து, பின்னர் சம்பவ இடம் சென்று கண்ணுற்ற சாட்சிகளான லட்சுமணன், முருகன் ஆகியோர்களை விசாரணைச் செய்து சம்பவ இடத்தினை சாட்சிகள் ராஜபாண்டி, பழனி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் வரைந்து சாட்சிகளிடம் தனித்தனியாக வாக்குமூலம் பதிவுச் செய்து, மேற்படி பார்வை மகஜர், வரைபடமானது அ.த.சா.ஆ.3, 4 ஆக குறியீடு செய்து, எதிரிகளை தேடி வந்த நிலையில் 1ம் எதிரியை 31.10.2018 அன்று பகல் 2.25 மணி அளவில் ரெட்டேரி பஸ் ஸ்டாப் அருகே கைதுக்கான காரணம் கூறி கைதுச் செய்து நிலையம் அழைத்து வந்து எதிரி ரஞ்சித்குமார் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார் என்றும், எதிரியை கைதுச் செய்யும் போது சாட்சிகள் சுப்பிரமணி, பாலகுரு ஆகியோர்கள் முன்னிலையில் குற்றத்தினை ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்து, 2 ம் எதிரி 22.07.2019 அன்று கைது செய்யப்பட்டார்

DEEPA P
Digitally signed by DEEPA P
Date: 2026.07.15 18:42:18 +0530

மற்றும் 3ம் எதிரி 03.12.2020 அன்று சம்பிரதாய கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும், பின்னர் எதிரிகள் மீது இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 397, 506(ii) இலிருந்து இதச பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 506(ii) என பிரிவு மாற்றம் செய்து, மேற்படி பிரிவு மாற்றல் அறிக்கையானது அ.த.சா.ஆ.5 ஆக குறியீடுச் செய்து, பின்னர் எதிரிகள் மீது விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கையானது நீதிமன்றத்தில் பின்னர் பணிபுரிந்த காவல் ஆய்வாளர் கோபிநாத் அவர்களால் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

**6)** இவ்வழக்கின் அ.சா.1 அரசு தரப்பு சாட்சி எதிரிகளுக்கு எதிராக பாதகமாக அளித்த சங்கதிகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவ எதிரிகள் அந்தப்பகுதிகளை பொய் என மறுத்துரைத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சி உள்ளதா என்று கேட்டபோது இல்லை என்று கூறினார்கள். எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7)** **<u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

**இவ்வழக்கின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகளாவன எதிரிகளானவர்கள் 341,294(b),336,427,392,506(ii) இதச பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதாகும்.**

இவ்வழக்கில் கடந்த 11.10.2018–ம் தேதி காலை சாட்சி–1ல் லஷ்மணன் ஊரிலிருந்து புறப்பட்டு மாலை சென்னைக்கு வந்து திருப்பதி கோவிலுக்கு செல்ல வேண்டி வடபழனியிலுள்ள தனது நண்பரின் வீட்டிற்கு போய் இரவு தங்கி கொண்டு மறுநாள் திருப்பதி செல்ல வேண்டி மாதவரம் ரவுண்டான பேருந்து நிறுத்தத்தில் இறங்கி ஆந்திர பேருந்து நிலையத்திற்கு அருகே எதிரிகள் மூவரும் சாட்சி–1யிடம் கொள்ளையடித்து சுயலாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட நோக்கோடு சாட்சி–1 லஷ்மணனை சட்ட விரோதமாக வழிமடக்கி யாருடா நீ ஊருக்கு புதுசா என்று மிரட்டி சாட்சி–1 லஷ்மணன் ஆம் என்று சொல்ல அதில் எதிரி–1 ஆன ரஞ்சித்குமார் (எ) ரஞ்சித் என்பவர் நாங்க யாருன்னு தெரியுமா இந்த ஏரியாவுலேயே பெரிய ரவுடி இந்த ரஞ்சித் பேர கேட்டாலே மாதவரம் ஏரியாவே நடுங்கும் நான் ரெண்டு கொலை கேசுல ஜெயிருக்கு போயிட்டு வந்தவன் என்று கூறி தகாத வார்த்தைகளால் திட்டி பாக்கெட்டுல எவ்வளவு பணம் வச்சிருக்கன்னு 1வது எதிரி ரஞ்சித்குமார் (எ) ரஞ்சித் தன்னிடம் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்துகாட்டி, சாட்சி–1 லஷ்மணனை மிரட்டியபோது சாட்சி–1 லஷ்மணன் அதற்கு பணம் இல்லையென்று சொல்ல அருகில் இருந்த 2வது எதிரி நாகராஜ் பணம் இல்லாம இங்க எப்படிட வந்த என்று கூறிக்கொண்டு இருக்கும்போது எதிரி–1 ரஞ்சித்குமார் (எ) ரஞ்சித் என்பவனும் எதிரி–3 ஆரோக்கியராஜ் என்பவனும் சாட்சி–1 லஷ்மணன் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூபாய்.5200/– மற்றும் சாட்சி–1 லஷ்மணன் கையில் கட்டியிருந்த 2000/– ரூபாய் மதிப்புள்ள டைட்டன் வாட்ச் மற்றும் தன் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த சாம்சங் பட்டன் டைப் செல்போனையும்

Digitally signed by DEEPA P
DEEPA P
Date: 2026.07.15 18:42:24 +0530

கொள்ளையடித்து கொண்டு எதிரிகள் மூன்று பேரும் தப்பிக்க முயற்சி செய்தபோது உடனே சாட்சி–1 லஷ்மணன் சுதாரித்துக்கொண்டு திருடன் திருடன் என சத்தம் போட்டபோது அருகிலிருந்தவர்கள் எதிரியை பிடிக்க வந்தபோது எதிரி–1 ரஞ்சித்குமார் (எ) ரஞ்சித் என்பவன் தன்னிடம் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து காட்டி யாராவது பிடிக்க வந்தீங்கன்ன இந்த கத்தியாலேயே கொன்னுவிடுவேன் என்று மிரட்டிக் கொண்டே தள்ளு வண்டி கடையிலிருந்த பிஸ்கட் பாட்டிலை எடுத்து ரோட்டில் போட்டு உடைத்து ரூபாய். 300/– நஷ்டத்தை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு பீதியை அடைய செய்து எதிரிகள் காரணமாக இருந்து குற்றம்புரிந்துள்ளார்கள். எனவே, எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 336, 427,392,506(ii) இதச பிரிவின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**8)** அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றசாட்டினை பொறுத்து நிரூபணம் செய்வதற்கு அ.சா.1 சாட்சியை விசாரணை செய்து, மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்து, எதிரிக்கு எதிரான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

**9)** எதிரிகள் தன் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தனக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், குற்ற சம்பவத்தை பொறுத்து தங்கள் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறி வாதிடப்பட்டது.

**10)** அரசு தரப்பில் ப.சா.1 முதல் ப.சா.9 சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்பட்ட போதும், அரசு தரப்பில் அ.சா.1 ஆக புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டன.

**11)** அ.சா.1 ஆக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட புலன் விசாரணை அதிகாரி தன்னுடைய சாட்சியத்தில், " கடந்த 12.10.2018 அன்று மாலை 5 மணி அளவில் புகார்தாரர் லட்சுமணன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப் பெற்று நிலைய குற்ற எண் 588/2018 ஆக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 397, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 ஆகவும், புகாரானது அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடுச் செய்து, பின்னர் சம்பவ இடம் சென்று கண்ணுற்ற சாட்சிகளான லட்சுமணன், முருகன் ஆகியோர்களை விசாரணைச் செய்து, சம்பவ இடத்தினை சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் வரைந்து சாட்சிகளிடம் தனித்தனியாக வாக்குமூலம் பதிவுச் செய்து, மேற்படி பார்வை மகஜர், வரைபடமானது அ.த.சா.ஆ.3, 4 ஆக குறியீடு செய்து, எதிரிகளை தேடி வந்த நிலையில் 1ம் எதிரியை 31.10.2018 அன்று பகல் 2.25 மணி அளவில் ரெட்டேரி பஸ் ஸ்டாப் அருகே கைதுக்கான காரணம் கூறி கைதுச் செய்து நிலையம் அழைத்து வந்து எதிரி ரஞ்சித்குமார் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார் என்றும், எதிரியை கைதுச் செய்யும் போது சாட்சிகள் முன்னிலையில் குற்றத்தினை ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்து, 2 ம் எதிரி 22.07.2019 அன்று கைது செய்யப்பட்டார் மற்றும் 3ம் எதிரி

DEEPA P
Digitally signed by DEEPA P
Date: 2026.07.15 18:42:32 +0530

03.12.2020 அன்று சம்பிரதாய கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும், பின்னர் எதிரிகள் மீது இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 397, 506(ii) இலிருந்து இதச பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 506(ii) என பிரிவு மாற்றம் செய்து, மேற்படி பிரிவு மாற்றல் அறிக்கையானது அ.த.சா.ஆ.5 ஆக குறியீடுச் செய்து, எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததினை பொறுத்து சாட்சியம் அளித்துள்ளார். இருப்பினும் அவர் அலுவல் சாட்சி ஆவா்ர. மேலும், இவ்வழக்கின் சம்பவம் தொடர்பாக சம்பவச் சாட்சிகளோ அல்லது கண்ணுற்ற சாட்சிகளோ யாரும் அரசு தரப்பில் விசாரிக்கப்படவில்லை. அதேபோல், அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எந்த நேரடி சாட்சியமும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே அ.சா.1 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகளுக்கு எதிரான வழக்கு நிரூபணம் செய்ததாக கருதுவது என்பது நீதியின் பால் உகந்தது அல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12)** எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள் 341,294(b),336,427,392,506(ii) இதச பிரிவின் கீழான குற்றசாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை. எனவே எதிரிகள் மேற்படி பிரிவுவின் கீழான குற்றத்தில் குற்றவாளிகள் என்பதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை குற்றவாளிகளுக்கு அளிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>முடிவாக</u>**

i) எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 341,294(b),336,427,392,506(ii) கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளுக்கு சந்தேகத்தின் பலனை நல்கி மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து குற்றவியல் நடைமுறைச்சட்டம் 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீ்ரப்பளிக்கிறது.

ii) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை.

(iii) மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரிகளால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைபத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் வருடம் ஜீலை மாதம் 15–ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

DEEPA P

Digitally signed by DEEPA P
Date: 2026.07.15 18:42:37 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**

**மாதவரம்**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகளின் விபரம் |
| --- | --- |
| அ.சா.1 | திரு.மோகன்தாஸ், சிறப்பு உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | தேதி | சான்றாவண விபரம் |
| --- | --- | --- |
| அ.சா.ஆ.1 | 12.10.2018 | புகார் |
| அ.சா.ஆ.2 | 12.10.2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 12.10.2018 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 12.10.2018 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 12.10.2018 | பிரிவு மாற்று அறிக்கை |

எதிரிகள் தரப்பு சாட்சி : இல்லை

எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

சான்று பொருட்கள் : இல்லை

**குறிப்பு**

1. எதிரிகள் வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்கள்.

2. வழக்கு விசாரணையில் எந்த சாட்சிகளும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை.

DEEPA P
Digitally signed by DEEPA P
Date: 2026.07.15 18:42:42 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**

**மாதவரம்**